

இராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்து நிறுத்தத்தில் இருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் மாவட்டத்தில் நகரம் மற்றும் புறநகர்களுக்கு 10 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நகரமன்றத் தலைவர் சுஜாதா வினோத், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் கணபதி, தொ.மு.ச. தலைவர் ரமேஷ் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம், நகரச் செயலாளர் பி.பூங்காவனம், மாவட்டப் பிரதிநிதி எஸ்.கிருஷ்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் இசட்.அப்துல்லா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில் இல்லந்தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கையை மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் . உடன் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் மு.பாபு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாணவர் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தித் தாரீர்! வேப்பந்தட்டை ஒன்றியம் –

# மலையாளப்பட்டி - சின்னமுட்லுவில் - கல்லாற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டும்!

## சட்டப் பேரவையில் — ம.பிரபாகரன் பேச்சு!



**சென்னை. ஏப்.12- சட்டப் பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய பெரம்பலூர் தொகுதி கழக உறுப்பினர் ம.பிரபாகரன், "வேப்பந்தட்டை ஒன்றியம்-மலையாளப்பட்டி - சின்னமுட்லுவில் கல்லாற்றின் குறுக்கே மிகப் பெரிய அணை கட்டப் பெற வேண்டும்" என்பது உள்ளிட்ட கோரிக் கைகளை வலியுறுத்திப் பேசினார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

மறைந்து 50 ஆண்டுகள் கடந்து, பாஸிச சக்திகளால் நுழைய முடியாத திராவிட எஃகு கோட்டையை கட்டிய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களை வணங்கி இந்த உரையை துவங்குகிறேன். ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக பாதுகாப்புக்கான இந்திய அரசியல் சட்டத்தை நமக்கு தந்த இந்தியாவின் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களை இந்த அவையில் வணங்கி மகிழ்கின்றேன்.

எளியவன் என்று ஏளனமாகப் பார்த்தவரை இந்திய பாராளுமன்றத்தை திரும்பிப் பார்க்க வைத்த பேரறிஞர் அண்ணாவை இந்த அவையில் வணங்கி மகிழ்வதில் பெருமையடைகிறேன். அன்றும், இன்றும், என்றும் எதிரிகளின் சிம்ம சொப்பனமாக விளங்கிக் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வேந்தரே, கழகத்தின் தலைமை வேந்தரே, உச்ச நீதிமன்றம் கைகாட்டிய வரலாற்று வேந்தரே, நீதியின் உச்சம் தொட்ட தமிழகத்தின் வேந்தரே, வேந்தரே, கழகத்தின் தலைமை வேந்தரே, உச்ச நீதிமன்றம் கைகாட்டிய வரலாற்று வேந்தரே, நீதிமன்றம் உச்சம் தொட்ட தமிழகத்தின் வேந்தரே, கட்டம் சரியில்லை என்று சொன்னவர்களை கட்டங்கட்டி கதிகலங்க வைத்துக் கொண்டிருக்கும் நமது திராவிட மாடல் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன்.

தமிழ்நாட்டின் புதிய அத்தியாயம் விளையாட்டுத் துறையின் பொற்காலத்திற்குச் சொந்தக்காரர், கடந்த ஆண்டு மழை, வெள்ளத்தின்போது காலையில் சென்னை, பிற்பகல் தூத்துக்குடி, மாலையில் கடலூர், இரவு திருவண்ணாமலை என்று மிக்ஜாம், ஃபெஞ்சால் புயல்களை வென்று, சூறாவளியாய் சுற்றி தமிழகத்தைக் காத்தவர்.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்

மீக்கூறும் மன்னன் நிலம்."

என்ற குறளுக்கேற்ப அன்பாக இருந்தாலும், கோபமாக இருந்தாலும் தனக்கே உண்டான பாணியில் தன்னுடைய ஒற்றைச் சிரிப்பால் அனைவரையும் கட்டிப் போட்டு வைத்திருக்கும் அன்பிற்குரிய துணை முதல்வர் அவர்களை இந்த அவையில் வணங்கி மகிழ்கின்றேன்.

நாடாளுமன்றத்தில் பாசிச சக்திகளை கதற வைத்துக் கொண்டிருக்கின்ற எங்களது மண்ணின் மைந்தர் கழக துணைப் பொதுச் செயலாளர், மேனாள் அமைச்சர் ஆ.ராசா வணங்கி மகிழ்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரம்பலூர் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர், கழகத் தலைவர், முதல்வர் அவர்களால் 'அரியலூரின் அரிமா' என்று பாராட்டப்பட்ட போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வணங்கி மகிழ்கின்றேன்.

அவை முன்னவர், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களது எளிமையான, அறிவார்ந்த பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் கே.என். அருண் நேரு அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். இந்த அவையிலுள்ள அனைத்து அமைச்சர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எனது பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட கழக நிர்வாகிகள், என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும், பெரம்பலூர் மாவட்ட அனைத்து பொதுமக்களுக்கும், நண்பர்களுக்கும், எனது நினைவில் வாழும் என்னுடைய தாய், தந்தையருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்கள் மற்றும் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையில் பெரம்பலூர் மாவட்டம், எறையூரில் ஜேஆர் 1 கோத்தாரி சிப்காட் காலனி பூங்காவை வழங்கிய தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களுக்கு இந்த அவையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த ஆண்டு 5,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 50,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் எவர்வான் கோத்தாரி ஃபுட்வேர் லிமிடெட் நிறுவனம் அமைக்க உத்தரவிட்ட தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த அவையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2024-2025 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில் எனது மானியக் கோரிக்கை உரையில் நான் வைத்த கோரிக்கையான பெரம்பலூர் நகராட்சியை மாநகராட்சியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றித் தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த வாய்ப்பின்மூலம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**புவிசார் குறியீடு பெற்றமைக்கு நன்றி!**

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிகுளம் பகுதியில் விளையும் சின்ன வெங்காயம் மற்றும் தழுதாழை, அரும்பாவூர் மரசிற்பம் ஆகியவற்றிற்கு புவிசார் குறியீடு பெற்றுத் தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் நகராட்சி, எறையூர் மற்றும் பாடலூர் சிப்காட் பகுதிகளுக்கு குடிநீர் வசதிக்காக ரூபாய் 345 கோடியில் தனி காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021-2025 ஆம் ஆண்டு வரை நான்காண்டுகளாக எனது பெரம்பலூர் சட்ட மன்றத் தொகுதியில் நீர்வளத் துறை சார்பாக தடுப்பணைகள், தூர்வாரும் பணிகளுக்கு ரூபாய் 42.5 கோடி நிதியை ஒதுக்கிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021-2025 ஆம் ஆண்டு வரை நான்காண்டுகளாக எனது பெரம்பலூர் சட்ட மன்றத் தொகுதியில் நெடுஞ்சாலைத் துறை சார்பாக பாலங்கள், சாலைகள் அமைக்க ரூபாய் 313 கோடி நிதி ஒதுக்கிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021-2025 ஆம் ஆண்டு வரை நான்காண்டுகளாக எனது தொகுதியில் வேளாண்மை மற்றும் பொறியியல் துறை மூலமாக விவசாயிகளுக்கு 13.66 கோடி நலத் திட்ட உதவிகளை வழங்கிய வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021-2025 ஆம் ஆண்டு வரை நான்காண்டுகளாக பெரம்பலூர் நகராட்சி பராமரிப்பு மற்றும் நகராட்சியை மேம்படுத்துவதற்காக 43 கோடியும், சாலைகள், குடிநீர் வசதிகள் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு குரும்பலூர் பேரூராட்சிக்கு ரூ.26.65 கோடியும், அரும்பாவூர் பேரூராட்சிக்கு ரூ.22.62 கோடியும், பூலாம்பாடி பேரூராட்சிக்கு ரூ.33.26 கோடியும், நிதி ஒதுக்கிய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021-2025 ஆம் ஆண்டு வரை நான்காண்டுகளாக பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் பொதுப் பணித் துறையின்கீழ் கட்டடங்கள், மருத்துவமனை கட்டடங்கள், அரசினர் மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்கள் கட்ட ரூபாய் 62.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021-2025-ல் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும், சாலைகள் மற்றும் பாலங்கள் வசதி ஏற்படுத்த சுமார் 82 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுதந்திரம் பெற்று இது நாள்வரை பேருந்து தடமே பதியாத ஊர்களுக்கெல்லாம் பேருந்து வசதி செய்து கொடுத்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது பெரம்பலூர் சட்ட மன்றத் தொகுதிக்குட்பட்ட கல்பாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தேவையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து முறையாக சிறுவாச்சூர் மற்றும் மேட்டுப்பாளையம் கிராமங்களில் புதிய வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை அமைத்து கொடுத்ததற்கும், பெரம்பலூர் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டடம் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என அறிவித்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கையாக, புதியதாக பிரிக்கப்பட்ட சிறுவாச்சூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு ஒரு புதிய கட்டடம் வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம் என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளுவாடி, திருவாலந்துறை ஆகிய இரண்டு கிராமங்களையும் கடலூர் மாவட்டத்தோடு இணைக்கும் வகையில், பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில் வெள்ளுவாடி, கொரக்காவாடி, திருவாலந்துறை, கீழக் கல்பூண்டி இடையே உள்ள இரண்டு மாவட்ட மக்களின் பயன்பாட்டிற்கு இரண்டு இணைப்பு பாலங்களுக்கு நிதி வழங்கிய முதல்வர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையில் எனக்கு பேச அனுமதியளித்த சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலாளர், சட்டமன்றப் பேரவை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொழிற்பயிற்சி நிலையம்!**

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தருமாறு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வேப்பந்தட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஒரு SIDCO தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மானியக் கோரிக்கையில், விவசாயத்திற்கு அடுத்தப்படியாக தமிழ்நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் குறு, சிறு நிறுவனங்கள் மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. 30 விழுக்காட்டிற்குமேல் மகளிர் தொழில்முனைவோராக உள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு முன்னுதாரணமாக உள்ளதோடு, மாநிலத்தில் நிலவும் வளமான வணிகச் சூழலுக்கு ஒரு சான்றாக திகழ்கின்றது.

பொறியியல் சம்பந்தமான பொருட்கள், வாகன பாகங்கள், வார்ப்புகள், pump, ஆயத்த ஆலைகள் மற்றும் தோல்பொருட்கள் போன்ற பல தொழில்களில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தின்கீழ் இதுவரை 2,386 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர்களுக்கு 259 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**கலைஞர் கைவினை திட்டம்!**

மரம் மற்றும் சிற்ப வேலைப்பாடுகள், நகை செய்தல், கண்ணாடி, மணி வேலைப்பாடுகள், இசைக் கருவிகள் தயாரித்தல் உள்ளிட்ட 26 வகையான தொழில்களில் கைவினைஞர்களுக்கு நிதியுதவி, திறன் பயிற்சி மற்றும் அவர்களின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்தையும் வழங்கிடும் நோக்கத்தோடு நமது கழக அரசால் தொடங்கப்பட்டுள்ள கலைஞர் கைவினைத் திட்டம் மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை ஐந்து மடங்காக உயர்ந்து, பத்தாயிரம் எண்ணிக்கையினைத் தாண்டி உயர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் அண்மையில் உருவாக்கப்பட்ட விண்வெளி தொழில்நுட்பம் சார்ந்து இயங்கும் புத்தொழில் நிறுவனங்கள் உலகளவில் தனி முத்திரை பதித்து வருகின்றன. செட்டிநாடு கைமுறுக்கு மற்றும் சீடை, இராமநாதபுரம் பனை கருப்பட்டி, கோவில்பட்டி சீவல் இராமநாதபுரம் பட்டறை கருவாடு போன்றவற்றிற்கு புவிசார் குறியீடு பெற்று தருவதற்கு முனைப்பாக உள்ள முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்துத் தொழிலாளர்களின் நலன்கள் மேம்படுகின்ற வகையில் நமது தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. திறன்மிக்க மனித வளத்தை அதிகரித்திட புதியதாக 10 இடங்களில் 4 தொழிற்பிரிவுகள் கொண்ட புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட உள்ளதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகள் தொழில் கல்வி பெற்று வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 7 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் 6 தொழிற்பிரிவுகளுடன் துவங்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

**மருத்துவ பரிசோதனை அட்டைகள்!**

கட்டுமானத் தொழிலாளர்களின் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு நோய்களைக் கண்டறிந்து, உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கும் வகையில் முழு உடல் பரிசோதனை செய்து, மருத்துவப் பரிசோதனை அட்டைகள் வழங்கப்படுவதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிற்கே முன்னோடியாக இணையம் சார்ந்த சேவைப் பணிகளில் ஈடுபடும் இளைஞர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்து வரும் நிலையில் இத்தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு இணையம் சார்ந்த தற்சார்பு தொழிலாளர் நல வாரியம் அமைத்த (மணியடிக்கப்பெற்றது) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இளைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் நன்றியுடன் பார்க்கிறார்கள்.

அதோடு தமிழ்நாட்டிலுள்ள இணையம் சார்ந்த சேவை பணி தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் சுமார் 15 இலட்சம் தொழிலாளர்களுக்கு விபத்து மரணம் இயலாமை நிலை இழப்பீட்டிற்கான குழு காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்துவதை வியப்போடு வரவேற்கிறேன். இதுபோன்ற இணைய சேவை பணி தொழிலாளர்களுக்கென்று அனைத்து வசதிகளுடன்கூடிய ஓய்வுக் கூடங்கள் சென்னை, கோவை உள்ளிட்ட நகரங்களில் உருவாக்கப்பட இருப்பதை இந்த இணைய சேவை இளைஞர் சமுதாயம் நன்றியுடன் பார்க்கின்றது.

**தொகுதி கோரிக்கைகள்!**

எனது தொகுதிக்குட்பட்ட கோரிக்கைகளை அவைக் குறிப்பில் பதிவு செய்து, சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அனுப்பி, நிறைவேற்றித் தருமாறுக் கேட்டுக் கொண்டு, ஒரு நான்கு கோரிக்கைகளை மட்டும் படிப்பதற்கு அனுமதி தருமாறுக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையானது திருமாந்துறை முதல் பாடாலூர் வரை கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டர் உள்ளது. அந்தத் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் ஏதாவது விபத்து ஏற்பட்டால் உடனடியாக காப்பாற்றுகின்ற வகையில் வாலிகண்டபுரம், பாடாலூர் பகுதிகளில் 30 படுக்கைகள் கொண்ட 2 மிக அவசர சிகிச்சை மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுத்து, அனைத்து உயிர்களையும் காப்பாற்ற வேண்டும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**நடமாடும் பென்னிகுயிக்!**

அதேபோல, நம்முடைய திராவிட மாடல் முதல்வர் அவர்கள் கன்னியாகுமரியில் கடலுக்கு நடுவே கண்ணாடி பாலம் கட்டி சாதனை செய்துள்ளார். இன்னும் மேலை நாடுகளில் கடலுக்கு நடுவிலே சாலைகள், பாலங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், எங்களது மாவட்டத்தில் நீண்ட நாள் கோரிக்கையான வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப்பட்டியில் உள்ள சின்னமுட்லுவில் கல்லாற்றின் குறுக்கே மிகப் பெரிய அணையைக் கட்டினால், அந்த ஒன்றியம் முழுமையாக பாசன வசதியை பெறும். பல்வேறு அரசியல் காரணங்களால் அந்த அணை வருவதை தடுக்கிறார்கள் என்று எங்கள் பகுதி மக்கள் நினைக்கின்றனர். எனவே, கல்லாற்றின் உபரிநீர் வீணாவதை தடுக்க இன்றைய நவீன உலகத்தின் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, சின்னமுட்லு அணையைக் கட்டி நம்முடைய திராவிட மாடல் முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டின் நடமாடும் பென்னிகுயிக் என அழைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

அதேபோல, மாநிலத்திலேயே பெரம்பலூர் மாவட்டம், பால் உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் திகழ்கிறது. தினசரி 2 இலட்சத்து 36 ஆயிரம் லிட்டர் அளவு பால் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்பு பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய பன்முக மருத்துவமனை Polyclinic என்று சொல்லக்கூடிய மருத்துவமனையை அமைத்து தர வேண்டுமாறு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களையும், மீன்வளம் -மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் சொல்லிவிடுகிறேன். பெரம்பலூர் துறைமங்கலம் பகுதியில் உள்ள ஏரியினை தூர்வாரி கரைகளை பலப்படுத்தி, தடுப்புச் சுவர் அமைத்து, அதன் சுற்றுப்புற பகுதிகளில் நடைபாதை அமைத்து, மக்களுக்கு பொழுதுபோக்கிற்காக சிறுவர் பூங்கா அமைத்து தருமாறு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு இன்னலும், இடையூறும் முன்பை விட பல மடங்கு இருக்கத்தான் செய்யும். ஆனால், உழைப்பு ஒரு நாளும் வீண் போகாது என்ற அண்ணாவின் வார்த்தையை கையில் ஏந்தி, (மேசையைத் தட்டும் ஒலி) நீட் தேர்வு விலக்கு போராட்டமாக இருந்தாலும், தொகுதி மறுசீரமைப்பு போராட்டமாக இருந்தாலும், இருமொழி கொள்கைக்கான போராட்டமாக இருந்தாலும் சரி, வஃபு வாரிய மசோதா பிரச்சினையாக இருந்தாலும், 2026 சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும், நமது திராவிட மாடல் முதல்வர், தளபதியார் அவர்கள் தலைமையில், நமது இளம் தலைவர் துணை முதலமைச்சர் சின்னவர் அவர்களின் வழிகாட்டுதலோடு, அனைத்து களப் போரிலும் முழுமையான வெற்றியைப் பெற்று, நமது கழக முன்னோடி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாதத்தில் சமர்ப்பிக்க உறுதியாக இருப்போம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும், வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு!

இவ்வாறு அவர் பேசினார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் பாச்சல் ஊராட்சி ஆசிரியர் நகரில் நடைபெற்ற தேர்தல் பணிக் குழுக்கான BLA2, BLC மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி, தொகுதி தேர்தல் பார்வையாளர் தாமரைச்செல்வன், ஒன்றிய செயலாளர் க.உமாகண்ரங்கம், சத்தியநாராயணன், மு.க.அருள்நிதி, கா.தேவராஜ், இந்திரஜித், திருமலை, ராஜேந்திரன், மோகன், தயாநிதி, கோபிநாதன் மற்றும் BLA2, BLC, கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.